# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

| | | |
|---|---|---|
| பிரிவு | : | TNPSC Group I தேர்வு |
| பாடம் | : | சமூகப் பிரச்சனைகள் |
| பகுதி | : | **குழந்தை துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை தொழிலாளர்கள்** |


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# குழந்தை துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை தொழிலாளர்கள்

**குழந்தை தொழிலாளர் வரையறை :**

14-வயதிற்குட்பட்ட குழந்தைகளால் செய்யபடும் வேலையின் காரணமாக அவர்களின் உடல்நலம், மனநலம், உளவியல் மற்றும் சமூக நிலையில் ஏற்படும் வளர்ச்சியைப் பாதிப்பிற்கு உட்படுத்தப்படும் அனைத்தையும் குழந்தை தொழிலாளர் முறை என வரையறுக்கப்பட்டுள்ளது.

14-வயதிற்குட்பட்ட எந்த ஒரு குழந்தையாக இருந்தாலும் நாள் ஒன்றுக்கு அதிக மணிநேரம் வேலை செய்யப்படுவதை குழந்தைத் தொழிலாளர் முறை என்று இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி வரையறுக்கப் -பட்டுள்ளது.

1989-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் 18-வயது வரை உள்ள அனைவரும் குழந்தைகளாக கருதப்படுவர் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

15-வயதிற்குட்பட்டவர்களை குழந்தைகள் என சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) கூறியுள்ளது.

14- வயது முடிந்த பின்பு தொழிலாளராக பணி அமர்த்திக் கொள்ளலாம் என இந்திய அரசு வரையறுத்துள்ளது.

**குழந்தைத் தொழிலாளர்களின் வகைகள்**

மிகவும் கண்டிக்கத்தக்க மற்றும் மோசமான செயல்பாடுகளான இராணுவப்பயன்பாட்டிற்கும், விபச்சாரப் பயன்பாட்டிற்கும் குழந்தைத் தொழிலாளர்களை பயன்படுத்துகின்றனர். மேலும் பல வகைகளில் பயன்படுத்துவதை பின்வருமாறு காணலாம்.

**ஒப்பந்தக் குழந்தைத் தொழிலாளர் (அ) கொத்தடிமை**

குழந்தைத் தொழிலாளர்களுக்கு மட்டுமில்லாமல் பெரியவர்களுக்கும் மிகவும் மோசமான தொழில் முறையில் ஒன்று கொத்தடிமை தொழில் முறையாகும்.

இந்தியா பாராளுமன்றத்தில் 1976-ம் ஆண்டு கொத்தடிமை தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் கொத்தடிமை முறை இச்சட்டத்தின்படி சட்டவிரோதச் செயலாக கருதப்படுகிறது.

இருப்பின் இந்த நடைமுறை இன்னும் பரவலாக உள்ளது.

செங்கல் உலை போன்ற கடினமான வேலை அல்லது கடினமான உடல் உழைப்பு துறைகளில் கொத்தடிமைத் தொழிலாளர்களை பயன்படுத்தியுள்ளனர்.

பெரும்பாலான தொழிலாளர் SC, ST வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்களும் அவர்களின் குழந்தைகளும் ஆவார்கள்.

கொத்தடிமையாக வேலை செய்தவர்களுக்கும் கொத்தடிமையாக விற்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் மிக குறைவான ஊதியமும் மற்றும் தானியமே வழங்கப்பட்டுள்ளனர்.

**வேளாண் துறை :**

1. இந்தியாவில் 80% குழந்தைத் தொழிலாளர்கள் வேளாண் தொழில் மற்றும் அதனோடு தொடர்பு கொண்ட துறைகளில் பணிபுரிகின்றனர்.
2. பணக்காரர்களிடம் இருந்து பெற்ற கடன்தொகையை திருப்பி செலுத்த முடியாத நிலையில் தங்கள் குழந்தைகளை விற்று விடுகின்றனர்.

**உற்பத்தித் துறை :**

1. கண்ணாடித் தொழில், தீப்பெட்டித் தொழிற்சாலை கம்பளித் தொழிற்சாலை, பூட்டுத் தொழிற்சாலைப் போன்ற அபாயம் நிறைந்த தொழில்களில் வேலைக்கமர்த்தப்படும் நிலை உள்ளது.
2. ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்யும் நிலைமை உள்ளது.

**நகரத் தெருக்களில் வேலை :**

1. இந்தியாவில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் நகரத் தெருகளிலே வாழ்ந்தும், வேலை செய்தும் வருகின்றனர்.
2. பெரும்பாலான குழந்தைகளை பிச்சை எடுத்தல், பூ வியாபாரக் கடை, நீர் விநியோகக் கடை, செய்திதாள் வியாபாரக் கடை என பல இடங்களில் வேலையில் ஈடுபட வைக்கின்றன.

**இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களுக்கான காரணங்கள் :**

இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்கள் அதிகரிக்க சமூக - பொருளாதார காரணிகளும் பங்கு வகிக்கின்றன.

**வறுமை :**

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களுக்கு குழந்தைகளின் வருமானம் பெரும் பயனளிப்பதாக உள்ளது.

குழந்தைகளின் வருமானம் பெரும் அளவில் இல்லை என்றாலும், வளரும் நாடுகளில் இது குடும்ப வருமானத்தில் ஒரு பங்கு என்னும் சிந்தனை பரவலாக காணப்படுகிறது.

**பெரிய குடும்பங்களும், மக்கள் தொகை உயர்வும் :**

இந்தியாவில் கிராமப்புறங்களில் பெரிய குடும்பங்கள் காணப்படுகின்றன. குடும்ப வருமானம் மிக குறுகிய அளவில் உள்ளதால் குழந்தைகள் வளரும் நிலையிலேயே குடும்ப வருமானத்திற்காக வேலைக்கு செல்கின்றனர்.

**எளிதில் கிடைக்கும் தொழிலாளர்கள் :**

1. இயந்திரமயமாதல் மற்றும் புதிய அறிவியல் தொழில் நுட்பங்கள் காரணமாக விரைவாக வேலையை முடிக்கும் எண்ணமும், குறைவான முதலீட்டில், அதிகமான இலாபம் பெறும் பொருட்டு முதலாளிகள், குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.
2. குழந்தைகளுக்கு குறைவான கூலியே போதுமானதாகவும் அதிகமான நேரம் வேலை வாங்க இயலும் குழந்தைகள் யூனியன் அமைத்து போராட்டம் நடந்த மாட்டார்கள், வேலை நிறுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள்.

**சமூக அங்கீகாரம் :**

1. சமுதாயத்தில் குழந்தைத் தொழிலாளர் முறை தவறு என்ற எண்ணம் ஏற்படவில்லை.
2. முதலாளிகளும், பெற்றோர்களும் அது சரியானது என்றே கருதுகின்றனர்.

**எழுத்தறிவின்மை :**

படிப்பறிவில்லாத பெற்றோர்களுக்கு ஒரு குழந்தையின் சரியான உடல் வளர்ச்சி மற்றும் புலனுணர்வு உணர்ச்சியின் வளர்ச்சித் தேவையைப் பற்றி உணரப்படுவதில்லை.

**நகரமயமாக்கல் :**

வளரும் நாடுகளில் நகரமயமாக்கல் முறைமையின் மூலம் பன்னாட்டு நிறுவனங்களில் மற்றும் ஏற்றுமதி தொழில்களில் குறிப்பாக ஆடைத் தொழிற்துறையில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துகின்றனர்.

**மற்ற காரணிகள் :**

1. குறைந்த இலாப மற்றும் சிறிய அளவிலான குடும்ப நிறுவன உற்பத்தி தொழிலில் வயது வந்தோர் தொழிலாளர்களுக்கு போதுமான ஊதியம் வழங்குவதில் பற்றாகுறை ஏற்படுதல்.
2. பொருளாதார மற்றும் நிரந்தரமற்ற அரசியல்.
3. பாகுபாடு மற்றும் இடம்பெயர்வு.
4. பாரம்பரிய கலாச்சார நடைமுறை.
5. நிலமற்ற நிலையில் இருக்கும் தொழிலாளர்கள் ஊதியம் மற்றும் ஒப்பந்த வேலையை சார்ந்திருக்கும் நிலைக்கு வழி வகுக்கும்.
6. குறைவான சமூக பாதுகாப்பு.
7. குழந்தைகளை ஆலைத் தொழிலுக்கு மிகவும் எளிதில் மாற்றி பயன்படுத்த முடியும்.
8. அவர்களின் விரல்கள் மற்றும் கைகளில் நெகிழ்வாக உள்ளன. ஆகவே அவர்கள் குறிப்பிட்ட செயல்பாட்டிற்கு மிக பொருத்தமாக உள்ளனர்.

குழந்தைகள் பெரும்பாலும் எதிர்ப்பை காட்டுவதில்லை. அதனால் எளிதில் கையாள முடியும். மேலும் சர்வதிகார கட்டுப்பாட்டில் வழி நடத்த முடியும்.

**இந்தியா மற்றும் உலகளவில் குழந்தைத் தொழிலாளரின்நிலை**

குழந்தைத் தொழிலாளர்களைப் பற்றி மிக துல்லியமான கணக்கெடுப்பு என்பது கடினமான ஒன்றாகும் ஏனெனில் தன் சுய லாபத்திற்காக பல குழந்தைத் தொழிலர்களை மறுக்கப்பட்டோ அல்லது மறைக்கப்பட்டோ வைக்கப்பட்டுள்ளனர்.

உலகில் 250 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளதாக ஒரு ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இன்றைய நிலவரப்படி இந்தியாவில் 12 மில்லியன் குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் இந்தியாவில் இளம் குற்றவாளிகள் உருவாகும் சூழல் ஏற்படுகிறது.

UNICEF-ன் ஆய்வறிக்கையின் படி உலக நாடுகளிலேயே இந்தியாவில் மட்டும் 17% குழந்தைத் தொழிலாளர்களின் வயது 15-வயதிற்குள் உள்ளது. மேலும் 12 வயது முதல் 15 வயது உட்பட்ட பெண் குழந்தைத் தொழிலாளர்கள் ஒரு குறிப்பிட்ட வருமானத்தில் வீட்டு வேலைச் செய்யவும் மற்றும் வீட்டு வேலைகளில் உதவிபுரியும் நிலையிலும் உள்ளனர். 2001-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி 252 மில்லியன் மொத்த குழந்தைகளில், 12.5 மில்லியன் குழந்தைகள் 5 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர்.

2011-ஆம் ஆண்டு தேசிய மக்கள் கணக்கெடுப்பின் படி 259.64 மில்லியன் மொத்த குழந்தைகளில் 4.35 மில்லியன் குழந்தைகள் 5 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர்கள் நிலை:**

தமிழ்நாட்டில் 5 முதல் 14 இடையிலான வயதில் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று UNICEF- நிறுவனத்தால் பத்தாண்டின் கால இடைவெளியின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு | குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 1981 | 9.75 |
| 2. | 1991 | 5.79 |
| 3. | 2001 | 4.19 |
| 4. | 2011 | 2.84 |

2011-ன் கணக்கெடுப்புபடி நீலகிரி மாவட்டம் (2095) கரூர் மாவட்டம் (2628) அரியலூர் மாவட்டம் (2769) மற்றும் பெரம்பலூர் மாவட்டம் (2783) என்று எண்ணிக்கையின் அடிப்படையில் குறைந்தபட்சக் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ள தமிழ்நாடு மாவட்டங்கள் ஆகும்.

அதிகபட்ச குழந்தைத் தொழிலாளர்கள் உள்ள மாவட்டங்கள் பின்வருவன:- சென்னை (26257), திருவள்ளூர் (18545), விழுப்புரம் (17629) மற்றும் காஞ்சிபுரம் (17589)

**குழந்தை தொழிலாளர்களின் வேலையின் நிலைமைகள் :**

**மனிதாபிமானமற்ற நிலை :**

குழந்தைத் தொழிலாளர்களை சுகாதாரமற்ற சூழ்நிலையிலும் மற்றும் சிறிய அறைகளிலும் வேலையில் அமர்த்தப்படுகின்றனர்.

**ஆபத்தான நிலைமை :**

குழந்தைத் தொழிலாளர்கள் மிக அபாயகரமான இரசாயன உலைகளின் அருகே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

**மாசுபாடு உள்ள தொழிற்சாலை :**

பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் மாசுப்பட்டத் தொழிற்சாலைகளில் அருவெறுப்பான துர்நாற்றத்தில் வேலைக்கு கையாளப்படுகின்றனர்.

**நீண்டநேர வேலை :**

ஒரு நாளைக்கு 10 முதல் 11 மணி நேரம் நீண்டநேர வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**குறைவான ஊதியம் :**

குழந்தைத் தொழிலாளர்களுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது.

**இழப்பீடு இல்லை :**

அவர்களுக்கு உடலில் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது உடல் ஊனம் அடைந்தாலோ இழப்பீடு இல்லை.

**சத்து குறைந்த உணவு :**

பெரும்பாலான குழந்தைத் தொழிலாளர்கள் சத்து குறைவான உணவையே உட்கொள்கின்றனர்.

**வலிமையற்ற உடல் நிலை :**

குழந்தைத் தொழிலாளர்களின் உடல் மற்றும் எலும்பு மெல்லிய உடையக்கூடிய நிலையில் உள்ளது சீரான உடல் நிலையில் அவர்கள் இல்லை.

**கடின உடல் உழைப்பு தொழிலாளராக :**

20 வயது குறைவானவர்கள் செய்யக் கூடாத கடினமான உடல் உழைப்பு வேலையை குழந்தைத் தொழிலாளர்கள் செய்ய உந்தப்படுகின்றனர்.

**சுகாதார ஆபத்து :**

கண்ணாடி தொழிற்சாலை, பீடி தொழிற்சாலைகளில் இங்கு பணிபுரியும் குழந்தைகளுக்கு தோல் நோய், சுவாச நோய், காச நோய் ஏற்படும்.

**உடல் முறை கேடு :**

பெண் குழந்தைத் தொழிலாளர்கள் கற்பழிக்கப்பட்டு ஒழுக்கம் கெட்ட செயல்களான பாலியல் தொழிலுக்கு கடத்தப்படுகின்றனர்.

**கொத்தடிமை தொழிலாளர் :**

1. யாரோ ஒருவர் மற்றொரு நபரின் கட்டுப்பாட்டில் தன் சுதந்திரத்தை இழந்து செய்யப்படும் நிலையாகும்.
2. ஒரு நபரிடம் பெற்ற கடன் திரும்ப செலுத்த முடியாத நிலையில் அவரிடம் பணிக்கு சேர்ந்து கடன்
3. திருப்பி கொடுக்க முயற்சிப்பது ஆகும்.
4. கடன் பட்டவர் இறந்தால் அவரின் வாரிசு, அக்கடனை அடைக்க அப்பணியில் கொத்தடிமையாக தொடர்வார்.
5. இது மனித மற்றும் சமூக தீய நடைமுறையாகும்.

**இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களுக்கான அரசிலமைப்பு விதிகள் :**

**சரத்து - 21 -** படி தனிமனித வாழ்க்கைக்கும், தனிமனித சுதந்திரத்துக்கும் போதியச் சட்டப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

**சரத்து 21A-**படி இந்தியாவிலுள்ள 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட சிறார்கள் அனைவருக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும்.

**சரத்து - 23 -** படி இந்திய மக்களுக்குச் சுரண்டலுக்கு எதிரான உரிமையைக் கொடுக்கிறது மேலும் ”மனித வியாபாரம்” எனப்படும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் இவர்களைப் பொருட்கள் போன்று வாங்கவோ, விற்கவோ கூடாது.

**சரத்து - 24 - படி** குழந்தைகளைப் பாதுகாப்பற்ற பணிகளில் ஈடுப்படுத்தக் கூடாது.

**சரத்து 39(E) படி** ஆண், பெண் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடை செய்வதுடன் அவர்களுக்கான உடல்நலம் மற்றும் வலிமையை உறுதி செய்வது.

**சரத்து 39 (F) படி -** ஆரோக்கியமான சூழ்நிலையில் வளர்வதற்கும், மரியாதையான சுதந்திர வாழ்விற்குமான வசதிகளையும், வாய்ப்புகளையும் அரசு உருவாக்கித் தருதல் வேண்டும்.

**சரத்து - 45 - 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல் மற்றும் அவர்களைப் பராமரித்தல் -** அரசு வழிகாட்டும் நெறிமுறைகள். இப்பகுதி 86-வது சட்டத் திருத்தம் 2002-ன் படி மாற்றியமைக்கப்பட்டது.

**சரத்து 51A (K) படி -** 6 முதல் 14 - வயதிற்குட்பட்ட குழந்தைகளின் பெற்றோர்களோ, காப்பாளர்களோ, அவர் இந்தியக் குடிமகனாக இருப்பின், அக்குழந்தைக்கு கல்வி கற்கும் வாய்ப்பளிப்பது அவர்தம் கடமையாகும் என இந்திய குடிமகனின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாக இந்த சரத்து சேர்க்கப்பட்டுள்ளது.

**சிறுவர் உழைப்பு தடுப்பு சட்ட விதிகள்:**

1. சாரதாச் சட்டம் 1929
2. தொழிற்சாலை சட்டம் - 1948

14 - வயதிற்குள் உள்ள குழந்தையை தொழிற்சாலையில் வேலைக்கு வைப்பதை தடை செய்கிறது.

**பயிலுநர் சட்டம் - 1961**

எந்த நபரும் 14 - வயதிற்குள் இருக்கும் குழந்தைகளுக்கு தொழில் பயிற்சி தருவதை தடை செய்கிறது.

**பெருந்தோட்டத் தொழிலாளர் சட்டம் - 1951**

இச்சட்டம் பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நலனுக்காக கொண்டுவரப்பட்டது.

**சுரங்கத் தொழில் சட்டம் - 1952**

18-வயதிற்குள் உள்ளவர்களை சுரங்கத்தொழிலில் ஈடுபடுத்தக்கூடாது என இச்சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் (ஒழுங்கு முறை மற்றும் தடைச் சட்டம் 1986)**

1. இச்சட்டப்படி 14-வயதிற்குட்பட்டவர் -கள் குழந்தைகள் என வழங்கப்படுகின்றனர்.
2. இது 16 வகையான தொழில்கள் மற்றும் 65 செயல்முறைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவதை தடை செய்கிறது.
3. இச்சட்டம் 2006 மற்றும் 2008-ல் விரிவாக்கம் செய்யப்பட்டது.

**போக்குவரத்து வாகன தொழிலாளர் சட்டம் - 1961**

14-வயதிற்குள் உள்ளவர்களை போக்குவரத்து வாகன தொழிலாளியாக செயல்படுவதை தடை செய்கிறது.

**பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர் சட்டம் - 1966**

14 - வயதிற்குள் உள்ளவர்களை பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்களாக வேலைக்கு வைப்பதை தடை செய்கிறது.

**தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் - 1947**

14 - வயதிற்குள் உள்ளவர்கள் பணியில் அமர்த்தக் கூடாது.

**தமிழ்நாடு கேட்ரிங் நிறுவனங்கள் தொழிலாளர் சட்டம் - 1958**

16 - வயதிற்குள் உள்ளவர்களை பணி செய்ய தடை செய்கிறது.

**தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சட்டம் - 1981**

16 - வயதிற்குள் உள்ளவர்களை பணியமர்த்த தடை செய்கிறது.

**தமிழ்நாடு கைத்தொழிலாளர் சட்டம் - 1982**

16 - வயதிற்குள் உள்ளவர்களை பணியில் அமர்த்த தடை செய்கிறது.

**இளம் குழந்தைகளின் (அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு) நீதிச் சட்டம் - 2000**

குழந்தைகளை தொழிலாளர்களாகவோ (அ) கொத்தடிமைகளாகவோ வேலைக்கு வைத்திருந்தால் அவர்கள் மீது குற்ற நடவடிக்கையின் அடிப்படை சிறைத் தண்டனையும் கிடைக்கும்.

**கல்வி உரிமை சட்டம் - 2009**

இச்சட்டத்தின் படி 6 - முதல் 14 - வயது குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வுரிமைப்படி தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடும் பொருளாதாரத்தில் பின்தாங்கியவர்களுக்கும் மற்றும் மாற்று திறனாளிக்கு கட்டாய ஒதுக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர் விளைவுகள் :**

1. குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகுதல் வருங்காலத் தேசிய மனித வளங்களின் திருட்டு என அழைக்கப்படுகிறது.
2. குழந்தைத் தொழிலாளர் முறையினால் மிக கொடூரமான எதிர்கால பண இழப்புகள் அடிப்படையில் மிகப்பெரிய அனைத்து வகை ஊழலும் நடைபெறும்.
3. HIV/AIDS, போதை மருந்து பழக்கம் மற்றும் மனநோய் குழந்தை தொழிலாளர்களுக்கு பொதுவானதாக இருக்கிறது.
4. குழந்தைத் தொழிலாளராக இருந்த காரணத்தினால் நீண்டகால உடல் நலக் குறைப்பாடு ஏற்படும்.
5. மிகவும் தீங்கு விளைவிக்கக்கூடிய அவர்களின் மனம், கல்வி மற்றும் உடல் வளர்ச்சி போன்றவை பாதிக்கின்றன.
6. அபாயகரமான தொழிற்சாலையில் தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களின் வாழ்நாள் மிகவும் குறுகியதாக மாறுகிறது.
7. அவர்களின் வருமானம் எந்த விதத்திலும் நாட்டின் வருவாயில் காட்டபடுவதில்லை, சுரண்டப் படுகிறது.

**இந்தியாவில் பல NGO-கள் செயல்பட்டு வருகின்றன.**

1. Bachpan Bachao Andolan
2. Care India
3. Talaash Association
4. Child Right and you (CRY)
5. Global march against child labour
6. Ride India எனப் பலர் உள்ளனர்.

**குழந்தைகளுக்கான உதவி எண் :**

1. இந்திய அரசாங்கம் நாடு முழுவதும் குழந்தைகளின் தரவளர்ச்சியை பாதுகாக்கும் பொருட்டு ஒரு கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. குழந்தைகளின் நல்வாழ்வை உறுதிபடுத்தும் பொருட்டு விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்கலும் இவற்றின் பணியாகும்.
3. அழைப்பிற்கான தொலைபேசி எண் - 1098

**சிசு கிரே திட்டம் :**

1. குழந்தைத் தத்தெடுப்பை வலியுறுத்தலும் அதிகரித்தலும் ஆகும்.
2. 10 குழந்தைகளுக்கான மானியம் 6 லட்ச ரூபாய் அரசால் வழங்கப்பட்டது.

**குழந்தைகளுக்கான பட்ஜெட் :**

குழந்தைகளின் சில சிறப்புத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு செலவினங்களுக்காக தனியாக நிதி ஒதுக்கப்படுகிறது.

**தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் 1988 (NCLP)**

1. இத்திட்டமானது மத்திய அரசின் திட்டமாகும்.
2. இத்திட்டம் நாட்டின் குழந்தைத் தொழிலாளர் கொள்கை 1987- கீழ் செயல்பட்டு வருகிறது.
3. இத்திட்டத்தின் செயல்பாட்டை மேற்பார்வை இட மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்/ மாவட்ட நீதிபதி ஆகிய தலைமைப் பதவியில் உள்ளவர்களுக்கு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.
4. மேலும் NGO-களும் பங்கு கொள்ளும்.

**நோக்கம் :**

1. குழந்தைத் தொழிலாளர்களை மீட்டு அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவி செய்து அவர்களின் கல்விக்காக சிறப்பு பள்ளிகளில் 50 குழந்தைகள் சேர்ந்து கல்வி கற்றிட உதவிபுரிகின்றன.

2. ஒவ்வொரு குழந்தைக்கும் ஊக்கத் தொகையாக ரூ. 100-ம் வழங்கப்பட்டு, ஒவ்வொரு குழந்தைக்கும் வளர்ச்சிக்கு ரூ. 100 செலவழித்து மதிய உணவுக்கு ரூ. 5-ம் என்ற மதிப்பில் பராமரிக்கப்படுகின்றனர்.

**(ICDS) ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் -1975**

இளம் பருவக் குழந்தைகளின் வளர்ச்சியில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டிற்காக 2-அக்டோபர் 1975-ஆம் ஆண்டு இத்திட்டமானது கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் கீழ் செயல்படுகிறது.

உலகிலேயே இந்தியாவில் மிகப்பெரிய திட்டமான, ஒருங்கிணைந்த இளம் பருவக் குழந்தைகளின் வளர்ச்சித் திட்டம் 1975-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டு நாடு முழவதும் 40,000 மையங்களாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

UNICEF நிறுவனமானது ICDS தொடங்க உதவி செய்கிறது. இந்நிறுவனம் ICDS தொடர்ந்து செயல்படவும், இத்திட்டம் தொடங்கவும் தேவையான நிதி உதவியும் மற்றும் தொழில் நுட்ப உதவியும் உலக வங்கியுடன்

இணைந்து உதவிகளை வழங்கி வருகிறது.

ICDS திட்டமானது மாவட்டத் திட்ட அதிகாரி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் அங்கன்வாடி ஊழியர், அங்கன்வாடி உதவியாளர் என்ற அமைப்பின்படி செயல்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம் :**

1. 0 - முதல் 6 - வயது வரை உள்ள குழந்தைகளின் ஊட்டசத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துதல்.
2. குழந்தைகளின் உளவியல் மற்றும் சமூக வளர்ச்சிக்கான அஸ்திவாரத்தை உறுதிப்படுத்துதல்.

3. குழந்தைகளின் இறப்பு, நோயுறுதல், ஊட்டசத்து குறைபாடு, பள்ளியில் இடைநிற்றல் போன்றவற்றினை குறைத்தல்.
4. கொள்கையின் அடிப்படையில் பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து குழந்தைகளின் வளர்ச்சி நிலையை மேம்படுத்தி செயல்படுத்த ஊக்குவித்தல்.
5. தாய்மார்களின் திறனை உயர்த்தவும், சாதாரண உடல் நலம் மற்றும் தேவையான ஊட்டசத்தின் பற்றி தெரிந்து கொள்ளவும் தரமான ஊட்டச்சத்து மற்றும் உடல் நலம் சார்ந்த படிப்பையும் பெற செய்தல்.

**சேவைகளின் தொகுப்பு :**

ICDS – நோக்கமான மேலே கூறப்பட்டுள்ள இந்த இலக்கை அடையும் நோக்கின் பல சேவைகளை தொகுத்து வழங்கியுள்ளன.

**அவையாவன :**

1. கூடுதல் சத்துணவு
2. நோய்த் தடுப்பு
3. உடல் சுகாதார சோதனை
4. சேவைகள் பரிந்துரைப்பது
5. முறைச்சாரா முன் கல்வி
6. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி

**குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 :**

1. 2009-ல் இயற்றப்பட்டது.
2. இந்திய அரசியலமைப்பு சாசனத்தின் 21A கீழ் இந்தியாவில் 6 மற்றும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குதல்.
3. கல்வியானது குழந்தைகளின் ஒரு அடிப்படை உரிமை என்ற சட்டம் 01 ஏப்ரல் 2010-ல் அமலுக்கு வந்த போது 135 நாடுகளில் ஒன்றான இந்தியாவிலும் செயல்முறைபடுத்தப்பட்டது.
4. இதை இந்திய அரசிலமைப்பில் 21 A மற்றும் 51 (K) ல் இணைக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள் :**

1. 6-14 வயதுள்ள குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கு உறுதி அளிக்கின்றனர்.
2. இதில் மன மற்றும் உடல்ரீதியான சவால் உள்ள குழந்தைகளையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. குழந்தைகள் இருக்கும் இடத்திலிருந்து 1 – 3 கி.மீ சுற்றளவில் பள்ளியானது இருக்க வேண்டும்.

**பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மாணவர்களுக்கு**

1. அனைத்து அரசு உதவி பெரும் பள்ளிகளும் தங்களின் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு அம்மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.
2. அரசின் உதவி பெறாத தனியார் பள்ளியிலும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் [Economically weak section (EWS)] மாணவர்களுக்கு தங்களின் வகுப்பு ஒன்றில் 25% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.
3. அரசுப் பள்ளிகளில் உள்ள மேலாண்மைக் குழுக்களில் 75% குழந்தைகளின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் இருக்க வேண்டும் மேலும் 50% பெண்களாக இருக்க வேண்டும்.
4. மாநில குழந்தை உரிமைகள் கமிஷன் அந்தந்த மாநிலங்களில் RTE சட்டம் செயல்படுத்தி கண்காணிக்க வேண்டும். அனைத்து மாநிலங்களிலும் மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுக்கள் அமைக்க வேண்டும். பள்ளி மேலாண்மை குழு 6 -14 வயது உள்ள குழந்தைகள் அனைவரின் பதிவேடுகள் மற்றும் அவர்கள் பள்ளியில் உள்ளனரா என கண்காணிக்கவும் வேண்டும் என உறுதி செய்யவும் வேண்டும்.

**<u>வினாக்கள்</u>**

1. குழந்தை தொழிலாளர் வரையறு. அவர்களின் நிலையினை விவரி?
2. குழந்தைத் தொழிலாளர்களுக்கான காரணங்கள் யாவை?
3. இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர்களை குறைப்பதற்காக சட்டங்கள் மற்றும் அரசு திட்டங்கள் பற்றி எழுதுக.